மக்கள் குரல்

27 - 11 - 2014

# இளைஞர்கள் சுய தொழில் துவங்க கருத்தரங்கு: சாய்ராம் நிர்வாக இயல் கல்லூரி நடத்தியது



சென்னை, நவ. 26–

சாய்ராம் நிர்வாக இயல் கல்லூரி மையம் சார்பில், இதன் எம்.பி.ஏ., படிப்பு மாணவர்களுக்கு 'இளைஞர்களுக்கு சுய தொழில் துவங்க ஊக்கம் என்ற தலைப்பில் கருத்தரங்கு நடத்தப்பட்டது. ஸ்ரீ காளீஸ்வரி பயர் ஒர்க்ஸ் டைரக்டர் ஏ.எஸ்.பி. ஆறுமுக செல்வன், சிறந்த மாணவர்களுக்கு பரிசு நூல்களை வழங்கினார்.

இந்த சிம்ஸ் நிறுவன டைரக்டர் கே.மாறன் வரவேற்றார்.

சிவகாமி பயர் ஒர்க்ஸ் டைரக்டர் ஏ.எஸ்.பி. ஆறுமுக செல்வன் பேசுகையில், எந்த ஒரு திட்டத்தையும் திட்டமிட்டால், அதை விரைவாக செயல்படுத்தி விட வேண்டும். கடுமையாக வேலை செய்து, திட்டமிட்டதை செயல்படுத்தி காட்ட வேண்டும்.

இதற்காக மாணவர்கள் அந்த துறை சார்ந்த அலுவலகத்தில் முதலில் பணிபுரிய வேண்டும். போதிய அனுபவம் பெற்று, சொந்தமாக தொழில் துவக்கலாம். அந்த துறைக்கு தேவைப்படும் நவீன தொழில் நுட்பம் பற்றி அறியலாம். தினசரி இதழ்களை படிப்பதை வழக்கம் கொள்ள வேண்டும். சமீபத்தில் பல பெண் சொந்த தொழில் வல்லுனர்கள் நிதி தட்டுப்பாடு காரணமாக, பிரச்சினைக்கு உள்ளாகின்றனர்.

அர்பணிப்புடன் பணியில் ஈடுபட்டு, வெற்றி காண வேண்டும் என்றார் அவர்.

சிறந்த முறையில் பதில் அளித்த மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை அவர் வழங்கினார்.

இந்த கருத்தரங்கில் ஒன்லி காபி நிறுவனம் டி.ஆர்.ஸ்ரீவத்சன் பேசுகையில், எந்த பணியில் ஈடுபட்டாலும், அர்பணிப்பு, இலக்கு கொண்டு செயல்பட வேண்டும். சக ஊழியர்களின் மேம்பாட்டுக்கு உதவ வேண்டும். இந்த சிறப்பு குணங்கள் எந்த துறையிலும் வாய்ப்புகள் பற்றிய கதையை கூளி, வணிகத்தில் வெற்றி பெற வழி காட்டினார்.

இதன் டைரக்டர் கே.மாறன் நன்றி தெரிவித்தார்.